# நமது தின கனி

காலை நாளிதழ்

NAMADHU DHINA KANI Daily Morning

| Vol: 02 | Issue: 6 | 4 Pages | 6.8.2024 | Tuesday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 | Tiruppur |
|---|---|---|---|---|---|---|---|
| மலர்: 02 | இதழ்: 6 | 4 பக்கங்கள் | 6.8.2024 | செவ்வாய்க்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 | திருப்பூர் |


## மீண்டும் வெடித்தது வன்முறை.. வங்கதேசத்தில் 91 பேர் பலி



வங்காளதேசம், ஆக. 6

வங்காளதேசத்தில் மீண்டும் வன்முறை வெடித்துள்ளது. போராட்டக்காரர்களுக்கும் ஆளுங்கட்சியினரின் ஆதரவாளர்களுக்கும் இடையே மோதல் வெடித்துள்ளதால் பதற்றம் ஏற்பட்டுள்ளது.

இந்த போராட்டத்தில் சிக்கி இதுவரை 91 பேர் பேர் உயிரிழந்துள்ளனர். இதன் எதிரொலியால், அங்கு நாடு தழுவிய ஊரடங்கு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

பாகிஸ்தானிடம் இருந்து சுதந்திரம் பெறுவதற்காக கடந்த 1971ல் நடந்த போரில் பங்கேற்ற வங்காளதேசத்தின் சுதந்திரப் போராட்ட தியாகிகளின் குடும்பத்தினருக்கு அரசு வேலைவாய்ப்புகளில் 30 சதவீத இடஒதுக்கீடு வழங்கப்பட்டு வருகிறது.

இந்த படைவீரர் இடஒதுக்கீடு முறை பாரபட்சமாக இருக்கிறது என மாணவர்கள் போராட்டத்தில் குதித்தனர்.

தலைநகர் டாக்காவில் உள்ள ஜஹாங்கீர் நகர் பல்கலைக்கழகத்தில் மாணவர்கள் போராட்டம் நடத்தினர். இந்தப் போராட்டத்துக்கு ஆளும் அவாமி லீக் கட்சியின் மாணவர் பிரிவைச் சேர்ந்தவர்கள் எதிர்ப்பு தெரிவித்தனர்.

இருதரப்புக்கும் இடையே மோதல் ஏற்பட்டு வன்முறை வெடித்தது. போலீசார் கண்ணீர் புகைகுண்டுகளை வீசி மாணவர்களை கலைத்தனர்.

இந்த வன்முறையில் 100க்கும் மேற்பட்ட மாணவர்கள் உயிரிழந்தனர். மேலும், போலீசார் உள்பட நூற்றுக்கும் மேற்பட்டோர் படுகாயம் அடைந்தனர்.

இந்த கலவரத்தால் ஏற்பட்ட துயரத்தில் இருந்து மக்கள் மீளாத நிலையில், மீண்டும் அங்கு வன்முறை வெடித்துள்ளது. இதில், இதுவரை 91 பேர் பேர் உயிரிழந்துள்ளனர். மேலும், பலி எண்ணிக்கையும் அதிகரித்து வருகிறது.

இட ஒதுக்கீடு விவகாரத்தில் தீர்ப்பு கிடைத்துவிட்ட போதிலும், பிரதமர் ஷேக் ஹசீனா பதவி விலகக் கோரி அங்கே பல ஆயிரம் மாணவர்கள் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். மேலும், இந்த போராட்டத்தில் உயிரிழந்தோருக்கு நீதி வேண்டும் என்றும் போராட்டம் நடத்தி வருகின்றனர்.

பல்லாயிரக்கணக்கான போராட்டக்காரர்களை கலைக்க போலீசார் கண்ணீர் புகை குண்டுகளை வீசியும், குண்டுகளை வீசியும் கலைத்தனர்.

இதையடுத்து, இன்று (ஞாயிற்றுக்கிழமை) மாலை 6 மணி முதல் கால வரையற்ற நாடு தழுவிய ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

## எப்போ கல்யாணம்? என்று கேட்டு நச்சரித்த பக்கத்து வீட்டுக்காரரை கட்டையால் அடித்துக் கொன்ற நபர்



இந்தோனேசியா, ஆக. 6

எப்போ கல்யாணம் என்று தன்னை அடிக்கடி கேட்டு நச்சரித்து வந்த பக்கத்து வீட்டு முதியவரை 45 வயது நபர் ஒருவர் கொலை செய்த சம்பவம் அரங்கேறியுள்ளது. இந்தோனேசியாவின் வடக்கு சுமத்ரா பகுதியில் உள்ள குடியிருப்பில் அசிம் இரியான்டோ [Asgim Irianto]என்ற ஓய்வுபெற்ற அரசு அதிகாரி வாழ்ந்து வந்தார்.

இவரது பக்கத்துக்கு வீட்டில் வசித்து வந்த 45 வயது சிரேகர் [Siregar] மீது கொண்ட அக்கறையில் அவரைப் அடிக்கடி பார்க்கும்போதெல்லாம் எப்போ திருமணம் செய்து கொள்ளபோகிறாய்?, 45 வயதாகியும் ஏன் சிங்கிளாக இருக்கிறாய்? என்று கேட்பதை வழக்கமாக வைத்துள்ளார். இதனால் கடும் மன உளைச்சலுக்கு ஆளான சிரேகர் கடந்த ஜூலை 29 ஆம் தேதி திங்கள்கிழமையன்று முதியவரின் வீட்டுக் கதவை உடைத்துக்கொண்டு உள்ளே நுழைந்துள்ளார்.

முதியவரின் மனைவியின் முன்னிலையிலேயே அவரை மரக்கட்டையால் கடுமையாக தாக்கியுள்ளார். சத்தம் கேட்டு அருகில் இருப்பவர்கள் வந்து சிரேகரைத் தடுத்து நிறுத்தி முதியவரை மீட்டு மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றனர். ஆனால் வழியிலேயே முதியவர் உயிரிழந்துள்ளார்.

இதனைத்தொடர்ந்து சிரேகரை போலீசார் கைது செய்துள்ளனர். திருமணம் குறித்து அவர் தொடர்ந்து கேள்வி கேட்டு வந்ததால் தான் மனதவளவில் பாதிக்கப்பட்டு முதியவரைத் தாக்கியதாக சிரேகர் போலீசில் வாக்குமூலம் அளித்துள்ளார்.

## பார்க்கிங் விதிமீறிய பெண்ணுக்கு ரூ.11 லட்சம் அபராதம்

பிரிட்டன், ஆக. 6

நாள்தோறும் வாகனங்களின் எண்ணிக்கை அதிகரிக்க, அதிகரிக்க பொது இடங்களில் பார்க்கிங் செய்வதும் பெரும் பிரச்சனையாகி வருகிறது. இதனை சமாளிக்க பல நாடுகளில் வாகனங்களை பார்க்கிங் செய்வதற்காக சில கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளது.

அந்த வகையில், இங்கிலாந்தில் பார்க்கிங் செய்த 5 நிமிடத்தில் கட்டணம் செலுத்தவில்லை என்றால் கடும் அபராதம் விதிக்கப்படும் என்ற விதி அமலில் உள்ளது.

இந்த விதியின் கீழ் ஒரு பெண்ணுக்கு ரூ.11 லட்சம் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது. அங்குள்ள டர்ஹாம் கவுண்டி பகுதியில் உள்ள டார்லிங் டன்னில் வசித்து வரும் ஹன்னா ராபின்சன் என்ற பெண், சம்பவத்தன்று தனது காரை வழக்கமாக நிறுத்தும் இடத்தில் நிறுத்தி உள்ளார். அவர் பார்க்கிங் செய்வதற்கான கட்டணத்தை கட்டியிருந்த நிலையிலும் அவருக்கு 11,000 பவுன்டுகள் (இந்திய மதிப்பில் சுமார் ரூ.11 லட்சம்) அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

இதனால் அதிர்ச்சி அடைந்த அவர், இதுதொடர்பாக சம்பந்தப்பட்ட பார்க்கிங் சர்வீஸ் நிறுவனத்திடம் விசாரித்தார். அப்போது ராபின்சன் கடந்த 2021ம் ஆண்டு முதல் இதுவரை பார்க்கிங் விதிமீறலில் ஈடுபட்டதற்காக ஒவ்வொரு முறையும் 170 பவுன்டுகள் வீதம் 67 முறை என மொத்தமாக அவருக்கு ரூ.11 லட்சம் அபராதம் விதிக்கப்பட்டிருப்பது தெரிய வந்தது. கார் பார்க்கிங்கில் போதிய இன்டர்நெட் இணைப்பு கிடைக்காததால், ஒதுக்கப்பட்ட நேரத்திற்குள் பணம் செலுத்த முடியவில்லை என அவர் விளக்கம் அளித்துள்ளார்.

# "அமைதி பேரணியில் அணி திரள்வோம்" கருணாநிதி நினைவுநாள் பேரணி: முதல்வர் ஸ்டாலின் கடிதம்

சென்னை, ஆக. 6

கருணாநிதியின் ஆறாவது நினைவு தினத்தை முன்னிட்டு திமுக சார்பில் அமைதி பேரணி நடைபெறுகிறது. இந்த அமைதி பேரணியில் திமுக தொண்டர்கள் கலந்து கொள்ள வேண்டும் என்று திமுக தலைவரும் தமிழக முதல்வருமான ஸ்டாலின் எழுதி உள்ளார்.

மறைந்த திமுக தலைவரும் முன்னாள் முதல்வருமான கருணாநிதியின் 6ஆவது ஆண்டு நினைவு தினம் ஆக.7 ஆம் தேதி கடைப்பிடிக்கப்படுகிறது. அதையொட்டி திமுக சார்பில் அமைதி பேரணிக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

கடிதம்: இதில் திமுக தொண்டர்கள் கலந்து கொள்ள வேண்டும் என திமுக தலைவரும் தமிழக முதல்வருமான ஸ்டாலின் எழுதி உள்ளார். இது குறித்து திமுக தொண்டர்களுக்கு அவர் எழுதியுள்ள கடிதத்தில், "நம் உயிருடன் கலந்த தலைவர் மறைந்த முன்னாள் முதலமைச்சர் கருணாநிதியின் அன்பு உடன்பிறப்புகளுக்கு உங்களில் ஒருவன் எழுதும் மடல். நம்மை இயக்கிக் கொண்டிருக்கும் கருணாநிதியின் ஆறாம் ஆண்டு நினைவு நாள், ஆகஸ்ட் 7ஆம் நாள். ஆறாத வடுவாக நம் இதயத்தை கீறிக் கொண்டிருக்கிறது. அவர் நம்மை விட்டுப் பிரிந்த அந்த வேதனை மிகுந்த நாள்.

ஆகஸ்ட் 2ஆம் நாளன்று புதுப்பிக்கப்பட்ட அண்ணா மேம்பாலத்தின் திறப்பு விழாவில், தமிழ்நாட்டின் முதலமைச்சராக உங்களில் ஒருவனாக நான் பங்கேற்றேன். உங்களைப் போலவே நானும் அந்த மேம்பாலத்தைப் பயன்படுத்துகிற பயனாளி தான். அந்தப் பயன் நமக்கு கிடைக்கச் செய்தவர் மறைந்த முன்னாள் முதலமைச்சர் கருணாநிதி.

கோவையில் நடைபெற்ற செம்மொழி மாநாட்டின் கருப்பொருளாக, 'பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்' என்ற திருவள்ளுவரின் குறளை, திராவிட இயக்கத்தின் சமூகநீதிக் குரலாக முன்னெடுத்தவரும் கருணாநிதி தான். மனித சமுதாயத்தில் ஓர் உயிர்கூட பிறப்பின் அடிப்படையில் பேதம் பிரிக்கப்பட்டு, தனது அடிப்படை உரிமைகளை காலம்காலமாக பறிகொடுத்துக் கொண்டே இருக்கக்கூடாது என்பதே சமூகநீதியின் அடிப்படை கொள்கை. அதனை நடைமுறைப்படுத்தும் வகையில், ஐந்து முறை தனக்கு ஆட்சி செய்யும் வாய்ப்பை தமிழ்நாட்டு மக்கள் வழங்கிய போதெல்லாம் சமூகநீதிக் கொள்கையை இடஒதுக்கீட்டின் மூலம் சட்டப்பூர்வமாக நிறைவேற்றியவர் கருணாநிதி தான். இட ஒதுக்கீடு: பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தினர், அதில் மிகவும் பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தினர், பட்டியலின மக்கள், பழங்குடியின மக்கள், சிறுபான்மை சமுதாயத்தினர் என அனைத்து தரப்பினரின் உரிமைகளையும் சமூகநீதிக் கொள்கை வழியாக நிலைநாட்டி, தமிழ்நாட்டில் இடஒதுக்கீட்டின் அளவினை இன்றுள்ள 69 விழுக்காட்டிற்கு உயர்த்தி வைத்தவரும் அவர்தான்.

பட்டியல் இன மக்களுக்கான இட ஒதுக்கீட்டை 18% என உயர்த்தியவரும் நம் உயிர்நிகர் தலைவர் கருணாநிதிதான். அதில் அருந்ததியர் சமுதாயத்தினருக்கு உரிய அளவில் ஒதுக்கீடு கிடைக்க வேண்டும் என்பதற்காக அவர்களுக்கு 3% உள்ஒதுக்கீடு வழங்கியவரும் அவர் தான்.

அருந்ததியர் சமுதாயத்தினரின் வாழ்க்கைத்தரம் உயர்வதற்கான அந்த உள்ஒதுக்கீட்டு மசோதாவை கடந்த 2009 ஆம் ஆண்டில் தமிழ்நாடு சட்டப்பேரவையில் முன்மொழியும் வாய்ப்பைப் பெற்றது, அன்று துணை முதலமைச்சராக இருந்த உங்களில் ஒருவனான நான்தான் என்பதில் இன்றைய கழகத் தலைவராகவும், கலைஞரின் மகன் என்ற முறையிலும் பெருமிதம் கொள்கிறேன். அந்த உள்ஒதுக்கீட்டின் அடிப்படையில் அருந்ததியர் சமுதாயத்து மாணவி மருத்துவம் படிப்பதற்கான ஆணையையும் வழங்கி மகிழ்ந்தது மறக்க முடியாத நினைவு.

உச்சநீதிமன்றத் தீர்ப்பு: சிறுபான்மைச் சமுதாயத்தினரான முஸ்லீம்களுக்கு 3.5% தனி இடஒதுக்கீட்டிலும், அருந்ததியர் சமுதாயத்தினருக்கான 3% உள்ஒதுக்கீட்டிலும் சட்டப்பூர்வமான அங்கீகாரத்தை உறுதி செய்யும் வகையில், உரிய தரவுகளுடனும், தெளிவான சட்டப்பார்வையுடனும், சமூகநீதியில் உண்மையான அக்கறையுடனும் கருணாநிதி மேற்கொண்ட நடவடிக்கைகள் எத்தகைய தொலைநோக்குப் பார்வை கொண்டவை என்பதை உச்சநீதிமன்றத் தீர்ப்பு உறுதிப்படுத்தியிருக்கிறது.

அந்தவகையில், நம் நெஞ்சத்தில் நிறைந்து வாழும் தலைவர் கருணாநிதி நினைவினைப் போற்றும் வகையில், ஆகஸ்ட் 7 அன்று சென்னை அண்ணா சாலை ஓமந்தூரார் அரசினர் தோட்ட வளாகத்தில் அமைந்துள்ள கருணாநிதி திருவுருவச் சிலை அருகிலிருந்து, அவர் நிரந்தர ஓய்வெடுக்கும் கடற்கரை நினைவிடம் வரை உங்களில் ஒருவனான என் தலைமையில் அமைதிப் பேரணி நடைபெற இருக்கிறது. கடல் அலைகளின் தாலாட்டில் நம் நினைவலைகளாக நெஞ்சில் நிறைந்துள்ள கருணாநிதியின் நினைவு நாள் அமைதிப் பேரணியில் அணி திரள்வோம். எதையும் தாங்கும் இதயம் கொண்ட தன் அண்ணன் அருகில் ஓய்வு கொள்ளும் ஓயாத உழைப்பாளியாம் கருணாநிதியின் நினைவிடம் முழுமையாகக் கட்டி முடிக்கப்பட்ட பிறகு நடைபெறுகிற முதல் அமைதிப் பேரணி இது.

நன்றி காணிக்கை: கருணாநிதியின் வரலாற்றையும் ஒரு நூற்றாண்டுகால தமிழ்நாட்டின் வரலாற்றையும் விளக்கும் வகையிலான அதிநவீன தொழில்நுட்ப வசதிகளுடன் அமைக்கப்பட்டுள்ள 'கலைஞர் உலகம்' எனும் அருங்காட்சியகத்தை உள்ளடக்கிய பேரறிஞர் அண்ணா கருணாநிதி நினைவிடங்கள் அமைந்துள்ள இடத்தை இந்த குறுகிய காலத்திற்குள் தமிழ்நாட்டிலிருந்தும், பிற இடங்களிலிருந்தும் பார்வையிட்டவர்களின் எண்ணிக்கை 10 லட்சமாகும். தங்கள் தலைமுறையை வாழவைத்த தலைவருக்குத் தமிழர்கள் செலுத்தும் நன்றிக் காணிக்கை இது.

நம் தலைவருக்கு நாமும் நம் நன்றிக் காணிக்கையைச் செலுத்துவோம். தமிழ்நாட்டின் பல்வேறு மாவட்டங்களில் உள்ள நிர்வாகிகள் அவரவர் பகுதிகளில் உள்ள தலைவர் அலுவலகங்களில் கருணாநிதியின் திருவுருவப் படத்திற்கு மாலையிட்டு மலர் தூவி நன்றியினைச் செலுத்துங்கள். தொண்டர்கள் அவரவர் வீடுகளில் கருணாநிதிக்கு நன்றியை செலுத்துங்கள். என்றென்றும் அவர் நம் உள்ளத்திற்குத் தரும் உத்வேகத்துடன் நம் லட்சியப் பயணத்தை தொடர்வோம். மக்கள் பணியாற்றித் தொடர் வெற்றிகளைக் குவிப்போம்" என்று அவர் கூறியுள்ளார்.

# கலைஞர் நினைவு மாரத்தான் நிதியுதவியுடன் எழும்பூர் குழந்தைகள் மருத்துவமனையில் ரூ.5.89 கோடியில் தங்கும் விடுதி: அமைச்சர் ஆய்வு

சென்னை, ஆக. 6

எழும்பூர் அரசு குழந்தைகள் நல மருத்துவமனை மற்றும் அரசு தாய் சேய் நல மருத்துவமனை ஆகிய இரு மருத்துவமனைக்கு சேர்த்து கட்டப்பட்டு வரும் குழந்தைகளின் பெற்றோர் மற்றும் உடனிருப்போர் தங்கும் விடுதி, உணவு தயாரிக்கும் கட்டிடத்திற்கான கட்டுமானப் பணியை அமைச்சர் மா. சுப்பிரமணியன் நேற்று ஆய்வு செய்தார். கலைஞர் மாரத்தான் மூலம்




திரட்டப்பட்ட நிதி, சென்னை மாநகராட்சி மற்றும் தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் ஆகிய நிதிகளின் கீழ் ரூ.5.89 கோடியில் விடுதி கட்டப்பட்டு வருகிறது.

ஆய்வின் போது எழும்பூர் சட்டமன்ற உறுப்பினர் பரந்தாமன், துணை ஆணையாளர் சிவகிருஷ்ணமூர்த்தி,

தலைமைப் பொறியாளர் ராஜேந்திரன், சென்னை மருத்துவக்கல்லூரி முதல்வர் தேரணிராஜன், எழும்பூர் அரசு குழந்தைகள் நல மருத்துவமனை இயக்குநர் ரமாசந்திரமோகன், அரசு தாய்சேய் நல மருத்துவமனை இயக்குநர் குப்புலட்சுமி மற்றும் அலுவலர்கள் உடனிருந்தனர்.

# பட்ஜெட்டில் தமிழ்நாடு புறக்கணிப்பு மாவட்ட தலைநகரங்களில் 14ம் தேதி ஆர்ப்பாட்டம்: மதிமுக பொதுக்குழுவில் தீர்மானம்

சென்னை, ஆக. 6

மதிமுக 30வது பொதுக்குழு கூட்டம் சென்னை அண்ணாநகரில் நேற்று நடந்தது. கூட்டத்திற்கு அவை தலைவர் ஆடிட்டர் ஆ.அர்ஜுனராஜ் தலைமை தாங்கினார். பொதுச்செயலாளர் வைகோ எம்.பி. சிறப்புரை ஆற்றினார். பொதுக்குழுவில் பொருளாளர் மு.செந்திலதிபன், முதன்மைச் செயலாளர் துரை வைகோ எம்.பி., துணைப் பொதுச்செயலாளர்கள் மல்லை சி.ஏ.சத்யா, செஞ்சி ஏ.கே.மணி, ஆடுதுறை இரா.முருகன், தி.மு.இராசேந்திரன், டாக்டர் ரொஹையா மற்றும் பொதுக்குழு உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

இந்த பொதுக்குழுவில் நிறைவேற்றப்பட்ட முக்கிய தீர்மானங்கள் பின்வருமாறு: நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்துள்ள பட்ஜெட்டில் தமிழ்நாடு முற்றாக புறக்கணிக்கப்பட்டிருப்பதற்கு கடும் கண்டனத்தைத் தெரிவிக்கிறது. நீட் தேர்வு ஒட்டுமொத்தமாக ரத்து செய்யப்பட வேண்டும். தேசிய தேர்வு முகமை கலைக்கப்பட வேண்டும்; பாஜ அரசு கொண்டுவந்துள்ள 3 புதிய சட்டங்களை ரத்து செய்ய வேண்டும். சாதிவாரி கணக்கெடுப்பை நடத்த வேண்டும்.

தமிழக மீனவர்கள் மீது தொடர்ந்து தாக்குதல் நடத்தி வரும் இலங்கை



கடற்படையின் செயல்களைத் தடுத்து நிறுத்த ஒன்றிய அரசு உறுதியான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். ஒன்றிய பாஜ அரசின் பட்ஜெட்டில் தமிழ்நாடு புறக்கணிக்கப்பட்டதை கண்டித்தும், பேரிடர் நிவாரண நிதியாக ரூ.37,000 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்ய வேண்டும் என தமிழ்நாடு முதல்வர் முன்வைத்த கோரிக்கையை ஒன்றிய அரசு அலட்சியப் படுத்தி உள்ளதை கண்டித்தும், சென்னை மெட்ரோ ரயில் திட்டத்திற்கு நிதி ஒதுக்கீடு கோரியும், நீர் தேர்வை ரத்து செய்யக் கோரியும் மதிமுக சார்பில் ஆகஸ்டு 14ம் தேதி காலை 10 மணிக்கு மாவட்ட தலைநகரங்களில் கண்டன ஆர்ப்பாட்டம் நடத்தப்படும் என்பது உள்ளிட்ட 22 தீர்மானங்கள்நிறைவேற்றப் பட்டன.

# முதுநிலை நீட் தேர்வு 700 கிலோ மீட்டருக்கு அப்பால் தேர்வு மையம் ஒதுக்குவதா? ராமதாஸ் கண்டனம்

சென்னை, ஆக. 6

பாமக நிறுவனர் ராமதாஸ் வெளியிட்ட அறிக்கை: இந்தியா முழுவதும் வரும் 11ஆம் தேதி நடைபெறவுள்ள முதுநிலை நீட் தேர்வை எழுதும் மாணவர்களுக்கு மாநிலத்தை விட்டு வேறு மாநிலத்திலும், வேறு பலருக்கு 700 கி.மீக்கு அப்பாலும் தேர்வு மையங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. மாணவர்களுக்கு மன உளைச்சலை ஏற்படுத்தும் வகையிலான இந்நடவடிக்கை கண்டிக்கத்தக்கது.

ஒரு மாணவருக்கு 500 கி.மீக்கும் அப்பால் தேர்வு மையம் ஒதுக்கப்பட்டால், அவர் அந்த மையத்திற்கு குறைந்தது 2 நாள் முன்னதாக




செல்ல வேண்டும். அங்கு அறை எடுத்து தங்க வேண்டும். அதற்காக பெருந்தொகை செலவழிக்க வேண்டும். எனவே, தேர்வு மைய ஒதுக்கீடுகளை ரத்து செய்துவிட்டு, மாணவர்களை விருப்பம் தெரிவித்துள்ள தேர்வு மையங்களில் ஒன்றை ஒதுக்கீடு செய்ய வேண்டும்.

# பட்டதாரி ஆசிரியர் தகுதி தேர்வில் வெற்றி பெற பழங்குடியின இளைஞர்களுக்கு இலவச சிறப்பு பயிற்சி வகுப்பு: ஆக.10ம் தேதி முதல் தொடக்கம்

சென்னை, ஆக. 6

ஒன்றிய அரசால் நிறைவேற்றப்பட்ட இலவச கல்வி மற்றும் கட்டாயக் கல்வி உரிமை சட்டத்தின் படி, பள்ளிக்கூடங்களில் ஆசிரியர்களாக நியமிக்கப்படுவர்கள் கட்டாயம் அரசால் நியமிக்கப்பட்ட நிறுவனத்தால் நடத்தப்படும் ஆசிரியர் தகுதி தேர்வில் தேர்ச்சி பெற்றவர்களாக இருக்க வேண்டும். அதன்படி தகுதி தேர்வுகள் நடத்தப்பட்டு ஆசிரியர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு வருகின்றனர். அந்தவகையில் டெட் என்றழைக்கப்படும் ஆசிரியர் தகுதி தேர்வில் வெற்றி பெற பழங்குடியின பட்டதாரி இளைஞர்களுக்கு சிறப்பு பயிற்சி வகுப்புகள் வரும் 10ம் தேதி முதல் தொடங்கப்பட உள்ளன.



பழங்குடியின நலத்துறை இயக்குனர் அண்ணாதுரை தெரிவித்திருப்பதாவது: டெட் தேர்வை எழுதுவதற்கு பழங்குடியினபட்டதாரிகளைதயார் செய்யும் விதமாக வரும் 10ம் தேதி முதல் 4 மாதங்களுக்கு சனி மற்றும் வார இறுதி நாட்களில் ஞாயிறுக்கிழமைகளில் காலை 10 மணி முதல் மாலை 5 மணி வரை சிறப்பு பயிற்சி வகுப்புகள் நடத்த திட்டமிட்டுள்ளோம்.

அதன்படி இந்த இலவச வகுப்புகள் 9 மாவட்டங்களில் உள்ள உண்டு உறைவிட பள்ளிகளில் ஸ்மார்ட் வகுப்பறைகளுடன், நவீன வசதிகள் கொண்ட பயிற்று அரங்கத்துடன் மற்றும் இணைய சேவையுடன் அனுபவமுள்ள ஆசிரியர்களை கொண்டு தனியார் பயிற்சி நிலையங்களை காட்டிலும் பல்வேறு வசதிகளுடன் நடத்தப்பட உள்ளன. ஏறக்குறைய 2061 பட்டதாரிகள் ஆசிரியர்கள் பணிகளுக்கான தொடர்ந்து முயற்சித்து வரும் நிலையில் இந்த வாய்ப்பை கட்டாயம் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். இதற்கான விண்ணப்பங்கள் தொடர்ந்து பெறப்பட்டு வருகின்றன.

பயிற்சியின் சிறப்பு அம்சங்கள்

★ அனுபவமிக்க ஆசிரியர்களின் வழிகாட்டுதல்

★ புதிய பாடத்திட்டத்தின்படி அச்சிடப்பட்ட பாட குறிப்புகள்

★ மாதிரி தேர்வுகள்

★ திருப்புதல் தேர்வுகள்

★ இணையவழி தேர்வு பயிற்சி

★ கேள்வி பதில் குறித்த விளக்க உரையாடல்

# கூடலூர் அருகே கோக்கால் பகுதியில் விரிசல்; நிலச்சரிவு அபாயம்: மக்கள் நடமாட தடை: வருவாய்த்துறை எச்சரிக்கை பேனர்

கூடலூர், ஆக. 6

கூடலூர் அருகே கோக்கால் பகுதியில் நிலச்சரிவு ஏற்படும் அபாயம் உள்ளதால் அந்த பகுதிகளில் மக்கள் நடமாட தடை விதிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக வருவாய் துறை சார்பில் எச்சரிக்கை பேனர் வைக்கப்பட்டுள்ளது.



நீலகிரி மாவட்டம் கூடலூர் நகராட்சிக்கு உட்பட்ட 21வது வார்டு மேல் கூடலூரை அடுத்த கோக்கால் பகுதியில் கடந்த பல வருடங்களுக்கு முன் அரசு வழங்கிய இலவச வீட்டு மனைகளில்சுமார்80க்கும் மேற்பட்ட குடும்பத்தினர் வீடு கட்டி குடியிருந்து வருகின்றனர். இலவசமாக நிலம் வழங்கப்பட்டதால் இப்பகுதி ஒன்றரை சென்ட் காலனி என்று அழைக்கப்படுகிறது. கடந்த ஜூன் மாதம் கூடலூர் சுற்றுவட்டார பகுதிகளில் பெய்த கனமழை காரணமாக இங்குள்ள குடியிருப்புகளில் 15க்கும் மேற்பட்ட வீடுகளின் சுவர்கள் மற்றும் நடைபாதைகளில் விரிசல் ஏற்பட்டது. முதியோர் காப்பகத்தின் ஒரு பகுதியில் உள்ள ஜெபக்கூடம் மற்றும் அருகில் உள்ள கட்டிடத்திலும் விரிசல் ஏற்பட்டது. இதைத்தொடர்ந்து அங்கு தங்கியிருந்த முதியோர் 48 பேர் வேறு காப்பகங்களுக்கு மாற்றப்பட்டனர்.

இப்பகுதியில் விரிசல்கள் அதிகரித்து வந்ததால் கட்டிடங்களும் அதிகம் சேதம் அடைந்தன. பாதுகாப்பற்ற வீடுகளில் இருந்தவர்கள் அங்கிருந்து வேறு பகுதிக்கு இடம் மாறவும், முகாம்களில் வந்து தங்கவும் வருவாய் துறை சார்பில் அறிவுறுத்தப்பட்டது. அப்பகுதியில் உள்ள 7 வீடுகளில் ஏற்பட்ட அதிகமான விரிசல் காரணமாக அங்கிருந்த 2 குடும்பத்தினர் முகாம்களிலும், மீதம் உள்ளவர்கள் வாடகை வீடுகளிலும் தஞ்சம் அடைந்தனர். லேசான விரிசல் ஏற்பட்ட ஆரம்ப காலகட்டத்திலேயே இப்பகுதியில் புவியியல் துறையினர் ஆய்வு நடத்தி சென்றனர். இந்த நிலையில் கேரள மாநிலம் வயநாடு மாவட்டத்தில் ஏற்பட்ட நிலச்சரிவுபோல இப்பகுதியிலும் நிலச்சரிவு ஏற்படலாம் என்ற அச்சம் மக்களிடையே ஏற்பட்டது. இது தொடர்பானவதந்திகளும் சமூக வலைத்தளங்களில் பரவின. எனவே குடியிருப்பு பகுதிகளுக்கு கீழ் பகுதியில் உள்ள அரசு மருத்துவமனையில் பாதுகாப்பு கருதி அங்குள்ள நோயாளிகள் ஊட்டி அரசு மருத்துவமனைக்கு இடமாற்றம் செய்யப்பட்டனர். உள்நோயாளிகள் பிரிவுகளும் மூடப்பட்டன.

மீண்டும் மத்திய புவியியல் மற்றும் சுரங்கத் துறை நிபுணர்கள், பொதுப்பணித்துறை அதிகாரிகள் கடந்த 1ம் தேதி 2வது முறையாக இப்பகுதிக்கு வந்து ஆய்வு செய்தனர். நாளை (6ம் தேதி) மீண்டும் இப்பகுதியில் நிபுணர்கள் ஆய்வு செய்ய உள்ளதாக கூறப்படுகிறது. இந்த நிலையில் இங்கு நிலச்சரிவு அபாயம் உள்ளதால் பொதுமக்கள் இப்பகுதியில் நடமாட தடை செய்யப்பட்டுள்ளது. இது தொடர்பாக கூடலூர் நகராட்சி சார்பில் அப்பகுதியில் விழிப்புணர்வு பேனர்கள் வைக்கப்பட்டு உள்ளன.

# படித்தது 3ஆம் வகுப்பு.. 3வது முறையாக கவுன்சிலர்.. நெல்லை மேயர் ஆகிறார் கிட்டு என்கிற ராமகிருஷ்ணன்






திருநெல்வேலி, ஆக. 6

திருநெல்வேலி மாநகராட்சி திமுக மேயர் வேட்பாளராக கிட்டு என்ற ராமகிருஷ்ணன் அறிவிக்கப்பட்டுள்ளார். நாளை மறைமுக மேயர் தேர்தல் நடைபெற இருக்கிறது. நெல்லை மாநகராட்சியில் திமுகவே பெரும்பான்மை என்பதால் கிட்டு என்ற ராமகிருஷ்ணன், நெல்லை மேயராக போட்டியின்றி தேர்வு செய்யப்படுவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

திருநெல்வேலி மாநகராட்சியில் மொத்தமுள்ள 55 கவுன்சிலர்களில் 51 பேர் திமுக கூட்டணி கவுன்சிலர்கள். திமுக பெரும்பான்மையாக உள்ள நிலையில், சரவணன் கடந்த முறை மேயராக தேர்வு செய்யப்பட்டார். மற்ற கவுன்சிலர்களின் வார்டுகளுக்கு பணிகளை முறையாக ஒதுக்கி தரவில்லை எனக் கூறி திமுக கவுன்சிலர்கள் எதிர்ப்பு தெரிவித்தனர். நம்பிக்கையில்லா தீர்மான நோட்டீஸும் அளித்தனர்.

நெல்லை மேயர் ராஜினாமா: எனினும், நெல்லை மாவட்ட பொறுப்பு அமைச்சர் தங்கம் தென்னரசு தலையிட்டு, சமாதானம் செய்து வைத்தார். இதனால் மேயருக்கு எதிரான நம்பிக்கை இல்லா தீர்மானத்தின் மீது வாக்கெடுப்பு நடைபெறவில்லை. இந்நிலையில், லோக்சபா தேர்தலுக்குப் பிறகு கட்சி தலைமை உத்தரவுப்படி கடந்த மாதம் மேயர் சரவணன் தனது மேயர் பதவியை ராஜினாமா செய்தார்.

நெல்லை மாநகராட்சி மேயராக இருந்த சரவணன் ஜூலை 3ஆம் தேதி அன்று தனது பதவியை ராஜினாமா செய்தார். இது தொடர்பாக மாநகராட்சி ஆணையரிடம் தனது ராஜினாமா கடிதத்தை சரவணன் கொடுத்த நிலையில் அந்த கடிதத்தில் தனிப்பட்ட காரணங்களுக்காக மேயர் பதவியில் இருந்து ராஜினாமா செய்வதாகவும் குறிப்பிட்டிருந்தார்.

நெல்லை திமுக மேயர் வேட்பாளர் கிட்டு என்கிற ராமகிருஷ்ணன்: நெல்லை மாநகராட்சி மேயரை தேர்ந்தெடுப்பதற்காக மறைமுக தேர்தல் நாளை ஆகஸ்ட் 5ஆம் தேதி நடைபெற இருக்கின்றது. நெல்லையின் அடுத்த மேயர் வேட்பாளர் யார் என்பது குறித்து இன்று அமைச்சர்கள் தங்கம் தென்னரசு, கேஎன் நேரு, நெல்லை எம்.எல்.ஏ அப்துல் வகாப் உள்ளிட்டோர் முன்னிலையில் இன்று நெல்லையில் ஆலோசனைகூட்டம் நடத்தப்பட்டது.

யார் இந்த கிட்டு?: திருநெல்வேலி மாநகராட்சி திமுக மேயர் வேட்பாளராக தேர்வு செய்யப்பட்டுள்ள கிட்டு என்ற ராமகிருஷ்ணன் 3ஆம் வகுப்பு வரை மட்டுமே படித்தவர். இவர் 25வது வார்டு திமுக கவுன்சிலராக உள்ளார். 3வது முறையாக கவுன்சிலராக இருந்து வருகிறார். அரசியலிலும், மாநகராட்சி பணிகளிலும் அனுபவம் மிக்கவர். கிட்டுவிற்கு திமுக மற்றும் கூட்டணி கட்சிகளின் கவுன்சிலர்கள் மத்தியில் ஆதரவு உள்ளது.




தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் சாமிநாதன் திருப்பூர் மாவட்டம் குண்டடம் ஊராட்சி ஒன்றியம் செங்கோடம்பாளையம் ஊராட்சி காசிலிங்கம்பாளையத்தில் முதல்வரின் கிராம சாலைகள் மேம்பாட்டுத்திட்டத்தின் கீழ் ஊதியூர் வஞ்சிபாளையம் சாலையிலிருந்து காசிலிங்கம் பாளையம் செல்லும் சாலை புதிப்பிக்கும் பணிகளை துவக்கி வைத்தார். உடன் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநர் மலர்விழி உள்ளார்.

# பண்ருட்டி அருகே ஆட்டோ மீது கார் மோதி அதிமுக மகளிரணி நிர்வாகி உள்பட 2 பேர் பரிதாப பலி: சென்னை மயிலாப்பூரை சேர்ந்தவர்கள்

பண்ருட்டி, ஆக. 6

கோயிலுக்கு சென்றுவிட்டு திரும்பிய போது ஆட்டோ மீது கார் மோதி சென்னை மயிலாப்பூரை சேர்ந்த அதிமுக மகளிரணி நிர்வாகி உள்பட 2 பேர் பலியாகினர். மேலும் 5 பேர் படுகாயம் அடைந்தனர். சென்னை மயிலாப்பூர் விசாலாட்சி தோட்டத்தை சேர்ந்தவர் கவுரி(56), மயிலாப்பூர் மேற்கு பகுதி அதிமுக மகளிரணி 123வது வட்ட பொருளாளர். இவர் உறவினரான அதே பகுதியை சேர்ந்த பரமேஸ்வரி (65), லில்லி(52) ஆகியோருடன் கடலூர் மாவட்டம் பண்ருட்டி சூரக்குப்பத்தில் உள்ள உறவினர் அஞ்சாபுலி(40) என்பவரின் வீட்டுக்கு சென்றுள்ளார்.





அங்கிருந்து நேற்று முன்தினம் கவுரி, பரமேஸ்வரி, லில்லி, அஞ்சாபுலி மற்றும் உறவினர்களான பண்ருட்டி திருவள்ளுவர் நகரை சேர்ந்த நிலவழகி(45), ராமச்சந்திரன்(63) ஆகியோருடன் முத்தாண்டிகுப்பம் கருப்புசாமி கோயிலுக்கு சென்று இரவு பூஜையில் பங்கேற்று விட்டு, நேற்று அதிகாலை ஆட்டோவில் பண்ருட்டிதிரும்பிகொண்டிருந்தனர். பணிக்கன்குப்பம் அண்ணா பல்கலைக்கழகம் அருகே, பின்னால் வந்தகாரின்டயர்திடீரென வெடித்ததில், டிரைவரின் கட்டுப்பாட்டை இழந்து ஆட்டோ மீது மோதியது.

இதில் ஆட்டோவில் சென்ற கவுரி, அஞ்சாபுலி ஆகியோர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர். ஆட்டோ டிரைவர் மணிகண்டன்(35) மற்றும் நிலவழகி, ராமச்சந்திரன், லில்லி, பரமேஸ்வரி ஆகிய 5 பேர் படுகாயமடைந்தனர். போலீசார் வழக்குப்பதிந்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# அனைத்திந்திய விவசாய மற்றும் தொழிலாளர்கள் சங்கத்தின் சார்பில் ஆலோசனை கூட்டம்

திருப்பூர், ஆக. 6

அனைத்திந்திய விவசாய மற்றும் தொழிலாளர்கள் சங்கத்தின் சார்பில் ஆலோசனை கூட்டம் நடைபெற்றது.

திருப்பூர் பிரிட்ஜ்வே காலனியில் உள்ள அனைத்திந்திய விவசாய மற்றும் தொழிலாளர்கள் சங்கத்தின் மாநில தலைமை அலுவலகத்தில் சங்கத்தின் நிறுவன தலைவர் ஜி.கே. விவசாய மணி (எ) ஜி. சுப்பிரமணி அவர்கள் தலைமையில் ஆலோசனை கூட்டம் நடைபெற்றது. இந்த கூட்டத்தில் வருகின்ற டிசம்பர் 21 இல் உழவர் பெருந்தகை நாராயண சாமி நாயுடு அய்யா அவர்களின் நினைவு தினத்தின் நிகழ்ச்சிகளை அனைத்து இந்திய விவசாய மற்றும் தொழிலாளர்கள் சங்கத்தின் சார்பாக சிறப்பாக நடத்துவதற்கு பல்வேறு ஆலோசனைகளை நிறுவன தலைவர் ஜி. கே. விவசாய மணி( எ) ஜி.சுப்பிரமணி அவர்கள் வழங்கினார். இந்த நிகழ்வில் சங்கத்தின் மாநில ,மாவட்ட ,மாநகர, வார்டு, ஒன்றிய நிர்வாகிகள், மகளிர் அணியினர் கலந்து கொண்டனர்.





# தூத்துக்குடி அருகே கிணற்றை சுத்தம் செய்யும் போது விஷவாயு தாக்கி இருவர் பலி

தூத்துக்குடி, ஆக. 6

தூத்துக்குடி அருகே கிணற்றை சுத்தம் செய்யும் போது விஷவாயு தாக்கி இருவர் பரிதாபமாக பலியாகினர். தூத்துக்குடி அருகே மாப்பிள்ளையூரணி பஞ்சாயத்துக்கு உட்பட்ட நேரு காலனி ஆனந்த் நகர் பகுதியை சேர்ந்தவர் கணேசன் (60). இவரது வீட்டில் 18 அடி ஆழ உறை கிணறு உள்ளது. இந்த கிணறு வெகு நாளாக சுத்தம் செய்யப்படாமல் துர்நாற்றம் வீசியுள்ளது. இதைத்தொடர்ந்து கணேசன் உறவினரான ஆறுமுகநேரியை சேர்ந்த மாரிமுத்துவுடன் (36) சேர்ந்து கிணற்றிலிருந்து மோட்டார் மூலம் நீரை வெளியேற்றும் பணியில் ஈடுபட்டு இருந்தார்.





அப்போது கிணற்றில் வாளி ஒன்று தவறி விழுந்துள்ளது. அதை எடுக்க கணேசன் கயிறு கட்டி இறங்கி உள்ளார். அப்போது விஷவாயு தாக்கி மயங்கி சாய்ந்தார். அவரை மீட்க கிணற்றில் இறங்கிய மாரிமுத்துவும் விஷவாயு தாக்கி மயங்கினார். வெகுநேரமாகியும் இருவரும் மேலே வராததால் உறவினர்கள் பவித்ரன், ஜேசுராஜ் ஆகியோரும் உள்ளே இறங்க தொடங்கினார். அவர்களுக்கும் மூச்சுத்திணறல் ஏற்பட்டுள்ளது.

தகவலறிந்து வந்த தூத்துக்குடி தீயணைப்பு துறையினர் சிறப்பு முககவசம் மற்றும் ஆக்சிஜன் சிலிண்டர் உதவியுடன் கிணற்றில் இறங்கி பவித்ரன் மற்றும் ஜேசுராஜை கயிறு கட்டி மீட்டு தூத்துக்குடி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். கணேசன் மற்றும் மாரிமுத்து இருவரும் பிணமாக மீட்கப்பட்டனர்.

இதுகுறித்து தாளமுத்து நகர் போலீசார் வழக்கு பதிந்து விசாரித்து வருகின்றனர்.

# வயநாடு பேரிடருக்கு திருப்பூர் கிட்ஸ் கிளப் பள்ளி சார்பில் தெற்கு எம்எல்ஏவிடம் நிவாரண பொருட்கள்

திருப்பூர், ஆக. 6

வயநாடு பேரிடருக்கு திருப்பூர் கிட்ஸ் கிளப் பள்ளி சார்பில் தெற்கு எம்எல்ஏவிடம் நிவாரண பொருட்கள் கொடுக்கப்பட்டது.




உலகையே உலுக்கிய வயநாடு நிலச்சரிவு பேரிடரில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவுகின்ற வகையில் திருப்பூர் கிட்ஸ் கிளப் கல்வி குழுமங்களின் சார்பில் அரிசி பருப்பு,மளிகைபொருட்கள், பிஸ்கட், போர்வை, பெட்ஷீட், ஆடைகள் உள்ளிட்ட அத்தியாவசிய பொருட்களை பள்ளியின் சார்பிலும் பள்ளியில் பயிலும் மாணவ மாணவிகள் சார்பிலும் கிட்ஸ் கிளப் கல்வி குழுமங்களின் தலைவர் மோகன் கே. கார்த்திக் அவர்கள் ரூபாய் 5 லட்சம் மதிப்புள்ள நிவாரண பொருட்களை திருப்பூர் தெற்கு தொகுதி சட்டமன்ற உறுப்பினர் க. செல்வராஜ் எம் எல் ஏ அவர்களிடம் வழங்கினார்கள். இந்த நிவாரண பொருட்களை திருப்பூர் மாவட்ட நிர்வாகம் சார்பில் பாதிக்கப்பட்ட வயநாடு மக்களுக்கு விரைவில் அனுப்பி வைக்கப்படும் என்று க.செல்வராஜ் எம் எல் ஏ தெரிவித்தார்.

இந்த நிகழ்ச்சியில் மாநில தொமுச துணைச் செயலாளர் தெற்கு மாநகர திமுக செயலாளரு மானடிகேடி.மு.நாகராஜ் மற்றும் மாமன்ற உறுப்பினர்கள், திமுக நிர்வாகிகள், பள்ளி ஆசிரிய பெருமக்கள் மாணவ மாணவிகள் கலந்து கொண்டனர்.

# பொன்னேரி அருகே விநாயகர் சிலை தயாரிக்கும் பணி மும்முரம்



பொன்னேரி, ஆக. 6

விநாயகர் சதுர்த்தி விழா அடுத்த மாதம் (செப்டம்பர்) 7ந்தேதி விமரிசையாக கொண்டாடப்பட உள்ளது. இதையொட்டி விநாயகர் சிலைகள் வைத்து வழிபாடு செய்யப்படுவது வழக்கம். பின்னர் இந்த சிலைகள் ஊர்வலமாக எடுத்து செல்லப்பட்டு நீர் நிலைகளில் கரைக்கப்படும்.

இந்த நிலையில் விநாயகர்சதுர்த்தியைமுன்னிட்டு விநாயகர் சிலைகள் தயாரிக்கும் பணிகள் பல்வேறு இடங்களில் தொடங்கி நடந்து வருகின்றன. பொன்னேரி பகுதியில் கிருஷ்ணாபுரம் வெள்ளோடை ஆண்டார்குப்பம், ஆகிய இடங்களில் விநாயகர் சிலைகள் தயாரிக்கும் பணி மும்முரமாக நடை பெற்று வருகிறது.

பல்வேறு வடிவங்களில் 3 அடி முதல் 15 அடி வரை பல வண்ணங்களில் பல முக விநாயகர், சிங்க முக விநாயகர், யானை முக விநாயகர், எருது விநாயகர்,

எலி அன்னம் விநாயகர், விளக்கு விநாயகர் , யானை புலி விநாயகர் என விதவிதமாக தயாராகி வருகின்றன.

இவை ரூ.3 ஆயிரம் முதல் ரூ.20 ஆயிரம் வரை விற்கப்படுகிறது. இப்போதே ஏராளமானோர் தங்களுக்கு தேவையான விநாயகர் சிலைகளுக்கு முன்பணம் செலுத்தி உள்ளனர்.

சுற்றுச்சூழலுக்கு மாசு ஏற்படுவதை தடுக்கும் வகையில் ரசாயனம் கலக்காமலும், நீரில் எளிதில் கரையக்கூடிய வகையிலும் விநாயகர் சிலைகள் தயாரிக்கப்படுகிறது. தற்போது தயாரான சிலைகளுக்கு வர்ணம் பூசும் பணியில் ஊழியர்கள் ஈடுபட்டு வருகிறார்கள்.

இதுகுறித்து விநாயகர் சிலைகளை தயாரிக்கும் பொன்னேரியை சேர்ந்த சரவணன் என்பவர் கூறும்போது, விநாயர் சதுர்த்தியை முன்னிட்டு கடந்த மூன்று மாதங்களுக்கு முன்பே சிலைகள் தயாரிக்கும் பணி தொடங்கி நடந்து வருகிறது.

தினமும் 10க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் இதில் ஈடுபட்டு உள்ளனர். தற்போது சிலைக்கு வர்ணம் பூசும் பணி நடைபெற்று வருகிறது. கடந்த மாதத்தில் இருந்தே திருவள்ளூர், சென்னை, காஞ்சிபுரம், மீஞ்சூர், பொன்னேரி, பகுதியை சேர்ந்தவர்கள் விநாயகர் சிலைகள் கேட்டு முன்பதிவு செய்து உள்ளனர். சுற்றுச்சூழலுக்கு மாசு ஏற்படாதவாறு சிலைகளை தயாரித்து வருகிறோம் என்றார்.

# இளைஞர்களுக்கு இலவச 'ஈஷா யோகா' வகுப்புகள்



கோவை, ஆக. 6

ஈஷா சார்பில் தமிழகத்தில் முதல்முறையாக வரும் ஆகஸ்ட் 7ஆம் தேதி முதல் 13ஆம் தேதி வரை, 25 வயதுக்குட்பட்ட இளைஞர்களுக்கு இலவசமாக ஈஷா யோகா வகுப்புகள் வழங்கப்பட உள்ளது. இவ்வகுப்புகள் தமிழகம் முழுவதும் மொத்தம் 24 இடங்களில் நடைபெறுகிறது.

தமிழகத்தில் ஈஷா அறக்கட்டளை மூலம் குறிப்பாக ஈஷா யோக நிகழ்ச்சி என்று வழங்கப்படும் யோகவகுப்புகளில் 'ஷாம்பவி மஹா முத்ரா' எனும் சக்தி வாய்ந்த பயிற்சி கற்றுத் தரப்படுகிறது.

இந்த யோகப் பயிற்சி மக்களின் உள்நிலை நல்வாழ்விற்காக, தொன்மையான யோக அறிவியலின் அடிப்படைகளில் இருந்து சத்குரு அவர்களால் வடிவமைக்கப்பட்டது.

உலகம் முழுவதிலும் பல லட்சக்கணக்கான மக்கள் இந்த குறிப்பிட்ட ஈஷா யோகா பயிற்சி மூலம் பல்வேறு உடல் மற்றும் மன நலன்களை பெற்றுள்ளனர்.

இந்நிலையில், தமிழகம் முழுவதிலும் 24 இடங்களில் நடைபெற இருக்கும் இவ்வகுப்புகள் காலை 6 மணி முதல் 8.30 மணி வரையிலும், மாலை 6 மணி முதல் 8.30 மணி வரையிலும் என ஒரு நாளின் இரு வேளைகளில் நடைபெறஉள்ளது. இதில் 15 வயது தொடங்கி 25 வயது வரை உள்ள இளைஞர்கள் பங்கேற்கலாம்.

சர்க்கரை நோய், இரத்தக்கொதிப்பு, இருதய நோய் போன்ற நாட்பட்ட நோய்களுக்கும் ஈஷா யோகாநல்லநிவாரணமாக இருப்பது கண்டறியப்பட்டுள்ளது. குறிப்பாக உள்நிலையில் தெளிவு, அமைதி மற்றும் ஆனந்தத்தை அனுபவித்து, இளைஞர்கள் தங்கள் வாழ்வில் வெற்றி இலக்குகளை அடைந்திட இந்த யோகப் பயிற்சி அற்புத வாய்ப்பாக அமையும்.

இந்த வகுப்பில் இலவசமாக பங்கேற்க விரும்பும் 25 வயதுக்கு உட்பட்ட இளைஞர்கள் isha.co/youthiyp என்ற இணையதளத்தில் பதிவு செய்து கொள்ளலாம் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

# வடசென்னை மாவட்ட பா.ஜ.க. தலைவர் கபிலன் கைது



கொளத்தூர், ஆக. 6

சென்னை கொளத்தூர் தொகுதிக்கு உள்பட்ட பெரவள்ளூர் அகரம் சந்திப்பு பகுதியில் கடந்த 1ந்தேதி பா.ஜ.க. சார்பில் மத்திய அரசின் பட்ஜெட் விளக்க பொதுக்கூட்டம் மற்றும் பாராளுமன்ற தேர்தலில் பா.ஜ.க.வுக்கு வாக்களித்த வடசென்னை மேற்கு மாவட்டம், கொளத்தூர் தொகுதி மக்களுக்கு நன்றி தெரிவிக்கும் பொதுக் கூட்டம் நடைபெற்றது.

வடசென்னை மேற்கு மாவட்ட பா.ஜ.க. சார்பில் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த கூட்டத்தில் பா.ஜ.க தேசிய செயலாளர் எச். ராஜா உள்ளிட்ட 200க்கும் மேற்பட்ட பா.ஜ.க. நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

இந்த கூட்டத்தில் வடசென்னைமேற்குமாவட்ட பா.ஜ.க. தலைவர் கபிலன் பேசுகையில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பற்றி அவதூறாக பேசியதாக கூறப்படுகிறது. இது தொடர்பாக அங்கு பாதுகாப்பு பணியில் ஈடுபட்டிருந்த போலீசார் புகார் அளித்தனர். இதையடுத்து பெரவள்ளூர் போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை மேற்கொண்டு வந்தனர்.

இந்த நிலையில் இன்று காலை வியாசர்பாடியில் உள்ள வீட்டில் இருந்த கபிலனை பெரவள்ளூர் போலீசார் கைது செய்தனர். அவர் மீது பல்வேறு பிரிவுகளின் கீழ் வழக்குப்பதிவு செய்யப்பட்டு உள்ளது. அவரிடம் தொடர்ந்து போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

பா.ஜ.க. மாவட்டத் தலைவர் கபிலன் கைது செய்யப்பட்ட சம்பவத்தை அறிந்த பா.ஜ.க. நிர்வாகிகள் இன்று காலை பெரவள்ளூர் போலீஸ் நிலையத்தை முற்றுகையிட்டனர். இதனால் அங்கு சிறிது நேரம் பரபரப்பு ஏற்பட்டது.

# சென்னையில் 100 புதிய பஸ்கள்: அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் தொடங்கி வைத்தார்



சென்னை: ஆக. 6

சென்னையில் மாநகர் போக்குவரத்து கழகத்தின் 88 புதிய பஸ்கள் மற்றும் 12 புதுப்பிக்கப்பட்ட பஸ்களை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் கொடியசைத்து தொடங்கி வைத்தார்.

பல்லவன் இல்லத்தில் நடைபெற்ற நிகழ்ச்சிக்கு போக்குவரத்து துறை அமைச்சர் சிவசங்கர் முன்னிலை வகித்தார்.

இந்த நிகழ்ச்சியில் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பஸ்களை கொடியசைத்து துவக்கி வைத்த துடன் புதிய பஸ்சில் ஏறி சிறிது தூரம் வரை பயணம் செய்தார். அவருடன் அமைச்சர் பி.கே. சேகர்பாபு,தயாநிதிமாறன் மற்றும் அதிகாரிகளும் உடன் பயணித்தனர்.

புதிதாக துவக்கி வைக்கப்பட்ட பஸ்கள் பிராட்வே, கிளாம்பாக்கம், ஆவடி, பூந்தமல்லி,திருப்போரூர், திருவொற்றியூர், திருவேற்காடு, தி.நகர், மகாபலிபுரம், திருவான்மியூர், தாம்பரம், கூடுவாஞ்சேரி, கோவளம் உள்ளிட்ட வழித்தடங்களில் இயக்கப்பட உள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

நீலநிறத்தில்விடப்பட்டு உள்ள இந்த பஸ்களில் தானியங்கி கதவுகள், டிஜிட்டல் பலகை, மாற்றுத்திறனாளிகள் பஸ்சில் ஏறுவதற்கு சிறப்பு சாய் தளம், சி.சி.டி.வி. கேமரா உள்ளிட்ட பல்வேறு வசதிகள் இடம்பெற்றுள்ளன.

# தமிழகத்தில் 15 போலீஸ் அதிகாரிகள் இடமாற்றம்

சென்னை, ஆக. 6

தமிழகத்தில் இன்று 15 போலீஸ் அதிகாரிகள் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர். சிலை தடுப்பு பிரிவு டி.ஜி.பி. சைலேஷ்குமார் யாதவ் போலீஸ் வீட்டு வசதி பிரிவுக்கு மாற்றப்பட்டுள்ளார்.

அங்கு ஐ.ஜி.யாக பணியாற்றிய டாக்டர் தினகரன் சிலை தடுப்பு பிரிவில் கூடுதல் பொறுப்புக்கு பணியமர்த்தப்பட்டுள்ளார்.

மத்திய குற்றப்பிரிவு கூடுதல் கமிஷனராக இருந்த செந்தில்குமாரி மாற்றப்பட்டு அந்த பதவிக்கு ராதிகா நியமிக்கப்பட்டுள்ளாார்.

வடசென்னை இணை கமிஷனராக பிரவேஷ்குமார், சென்னை கிழக்கு மண்டல இணை கமிஷனராக சரோஜ்குமார் தாகூர் ஆகியோரும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

# கார் டயர் வெடித்து ஆட்டோ மீது மோதி விபத்து 2 பேர் பலி



பண்ருட்டி, ஆக.6

சென்னையை சேர்ந்த ஒரு குடும்பத்தினர் பண்ருட்டிக்கு நேற்று வந்தனர். இவர்கள் முத்தாண்டிகுப்பம் கருப்பசாமி கோவிலுக்கு சென்றனர். அங்கு ஆடி அமாவாசையை முன்னிட்டு நடைபெற்ற நள்ளிரவு பூஜையில் பங்கேற்று வழிபட்டனர்.

பின்னர் இன்று அதிகாலை முத்தாண்டிக்குப்பத்தில் இருந்து பண்ருட்டிக்கு ஆட்டோவில் சென்று கொண்டிருந்தனர். பண்ருட்டி அருகே பணிக்கன் குப்பம் கிராமம் அண்ணா பல்கலைக்கழகம் அருகில் ஆட்டோ வந்து கொண்டிருந்தது. அப்போது சிதம்பரத்திலிருந்து பண்ருட்டிக்கு வந்து கொண்டிருந்தகாரின்டயர் திடிரெனவெடித்தது.

இதனால் டிரைவரின் கட்டுப்பாட்டை இழந்த கார், முன்னாள் சென்று கொண்டிருந்த ஆட்டோ மீது மோதி விபத்துக்குள்ளானது. இதில் ஆட்டோவில் பயணம் செய்த சென்னை மயிலாப்பூர் விசாலாட்சி தோட்டத்தை சேர்ந்த அ.தி.மு.க. நிர்வாகி கவுரி (வயது 56), பண்ருட்டி சூரகுப்பத்தை சேர்ந்த அஞ்சாபுலி (40) ஆகியோர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர்.

மேலும், சென்னை மயிலாப்பூர் விசாலாட்சி தோட்டத்தை சேர்ந்த பரமேஸ்வரி (65), பண்ருட்டி திருவள்ளுவர் நகர் நிலவழகி (45), பண்ருட்டி அம்பேத்கர் நகரை சேர்ந்த மணிகண்டன் (35), ஆட்டோ டிரைவர் பண்ருட்டி திருவள்ளுவர் நகரைச் சேர்ந்த ராமச்சந்திரன் (63), சென்னை மயிலாப்பூரை சேர்ந்த லில்லி (52) ஆகிய 5 பேர் படுகாயமடைந்தனர்.

அவ்வழியே சென்றவர்கள் படுகாயமடைந்து கிடந்த 5 பேரை மீட்டு 108 ஆம்புலன்ஸ் மூலம் பண்ருட்டி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். பின்னர் மேல் சிகிச்சைக்காக அங்கிருந்து கடலூர் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். இது குறித்த தகவலின் பேரில் சம்பவ இடத்திற்கு காடாம்புலியூர் போலீஸ் இன்ஸ்பெக்டர் பலராமன், சப்இன்ஸ்பெக்டர் பிரேம்குமார் தலைமையிலான போலீசார் விரைந்து சென்றனர்.

விபத்தில் இறந்த 2 பேரின் உடலை கைப்பற்றி பிரேத பரிசோதனைக்காக பண்ருட்டி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். மேலும், விபத்து குறித்து வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர். ஆடி அமாவாசைவழிபாடு முடிந்து திரும்பிய 2 பேர் விபத்தில் பலியான சம்பவம் அப்பகுதி மக்களிடையே சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

# மாணவரை அடித்துக்கொன்ற போதைக்கும்பல் எடப்பாடி பழனிசாமி கண்டனம்



சென்னை, ஆக. 6

அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி இன்று வெளியிட்டுள்ள அறிக்கையில்,

திருச்சி ஸ்ரீரங்கத்தில் காவிரி ஆற்றுப்பெருக்கை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த விராலிமலையைச் சேர்ந்த ரஞ்சித் கண்ணன் என்ற மாணவரை போதைக்கும்பல் அடித்துக் கொலை செய்துள்ளதாக வரும் செய்தி அதிர்ச்சியளிக்கிறது.

ஆடிப்பெருக்கன்று காவிரி ஆற்றங்கரையில் கொலை நடப்பது என்பது, இந்த விடியா திமுக ஆட்சியில்சட்டம்ஒழுங்கு எந்த அளவிற்கு சீர்கெட்டுள்ளது என்பதற்கு அத்தாட்சி.

கடந்த ஒரு வாரத்தில் மட்டும் சென்னை, கடலூர், நாகப்பட்டினம், திருச்சி, கரூர், கோவை, சிவகங்கை, கன்னியாகுமரி என தமிழ்நாடு முழுவதும் தொடர்ச்சியாக கொலை தொடர்பான செய்திகள் வந்த வண்ணம் உள்ளது மிகுந்த அதிர்ச்சியும் கவலையும் அளிக்கிறது.

விடியா திமுக ஆட்சியில் தமிழ்நாடு கொலைக்களமாக மாறியுள்ளது என்று சொன்னால் அது மிகையாகாது.

வாரந்தோறும் ராசிப் பலன்கள் போடுவது போல கொலைப் பட்டியல்களை நாளிதழ்கள் பிரசுரிக்கும் அளவிற்கு சட்டம் ஒழுங்கை அடியோடு சீர்குலைத்துள்ள விடியா திமுக அரசுக்கு எனது கடும் கண்டனம்.

தினம் அரங்கேறும் கொலை சம்பவங்களால் எப்படி மக்கள் பாதுகாப்பாக உணர முடியும்? எப்படி தினந்தோறும் அச்சமின்றி வேலைக்கு செல்ல முடியும்? எப்படி நம் மாநிலத்திற்கு சுற்றுலா பயணிகள் வருவார்கள்? எப்படி புதியதொழில்முதலீடுகள் வரும்?

"தமிழ்நாட்டின்வளர்ச்சி என்பது நீங்கள் உங்களுக்காக செய்துகொள்ளும் செய்திதாள் அல்லது தொலைக்காட்சி விளம்பரங்கள் மூலமாக வராது; சீரான சட்டம் ஒழுங்கு தான் அதற்கு அடிப்படை" என்பதை உணர்ந்து,

அஇஅதிமுகவின் திட்டங்களுக்கு ஸ்டிக்கர் ஒட்டுவதில் மட்டும் செலுத்தும் கவனத்தை சட்டம் ஒழுங்கைக் காப்பதற்கான நடவடிக்கைகளில் இனியாவது செலுத்துமாறு விடியா திமுக முதல்வரை வலியுறுத்துகிறேன்.

# ஒற்றை யானை தாக்கி விவசாயி படுகாயம்



தருமபுரி, ஆக. 6

தருமபுரி மாவட்டம் ஏரியூர் அருகே தொன்ன குட்டஹள்ளி குட்டக்காடு பகுதியைச்சேர்ந்த சின்னராஜ். இவரது மகன் செல்வகுமார், இவர் அவருடைய விவசாய நிலத்தில் சுமார் 4 ஏக்கரில் வாழை மரங்கள் வைத்து விவசாயம் செய்து வருகிறார்.

இந்த நிலையில் அடிக்கடி ஒற்றை யானை ஒன்று அவரது விவசாய நிலத்தில் உள்ள வாழை மரங்களை சேதப்படுத்தி வந்துள்ளது. அதேபோல் நேற்று இரவு ஒற்றை யானை வாழை தோட்டத்தை சேதப்படுத்தி விட்டு விவசாயி தூங்கி கொண்டிருந்த போது விவசாயியை தாக்கியுள்ளது. அருகிலுள்ள விவசாயிகள் இதனைக் கண்டு சத்த மிட்டத்துடன் பட்டாசுகளை வெடித்து அங்கிருந்து யானையை விரட்டி அடித்தனர். பின்னர் காயம் அடைந்த விவசாயியை 108 ஆம்புலன்ஸ் மூலம் பென்னாகரம் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அனுப்பி வைத்தனர். யானை தாக்கியதில் விவசாயியின் வலது கால் முறிவு ஏற்பட்டுள்ளது .

இந்த சம்பவம் அப்பகுதி கிராம மக்களிடையே அச்சத்தை ஏற்படுத்தி உள்ளது. உடனடியாக வனத்துறையினர் ஒற்றை யானையை காட்டுக்குள் விரட்ட வேண்டும் என்பதே அப்பகுதி மக்களின் கோரிக்கையாக உள்ளது.

# வயநாடு நிலச்சரிவு: 3 வயது குழந்தையை விட்டு விட்டு மீட்பு பணியில் ஈடுபடும் சென்னை தம்பதி



வயநாடு: ஆக. 6

கேரள மாநிலம் வயநாடு நிலச்சரிவு மீட்பு பணியில் சென்னையை சேர்ந்த தன்னார்வலர்களான பிரதாப்சங்கவி தம்பதியினர் ஈடுபட்டு வருகிறார்கள். அவர்கள் தங்களது 3 வயது குழந்தையை விட்டு விட்டு ஆர்வமுடன் மீட்பு பணியில் ஈடுபட்டு வருகிறார்கள்.

இதுதொடர்பாக பிரதாப் கூறியதாவது:

எங்கள் குழுவை சேர்ந்த தன்னார்வலர்கள் ஏற்கனவே வயநாடு பகுதிக்கு வந்து மீட்பு பணியில் ஈடுபட்டு வருகிறார்கள். அவர்கள் சில வீடியோக்களை எங்களுக்கு அனுப்பினார்கள்.

அதில் பாதிக்கப்பட்ட சில குழந்தைகளின் வீடியோக்களும் இருந்தன. நிலச்சரிவால் பாதிக்கப்பட்டு தவித்த குழந்தைகளின் வீடியோக்களை பார்த்தபோது மிகவும் கஷ்டமாக இருந்தது.

அதை உணர்ந்துதான் நாங்கள் மீட்பு பணிக்கு வந்தோம். நாங்கள் ஏற்கெனவே வெள்ளத்தின் போது மீட்பு பணியில் ஈடுபட்டுள்ளோம். அந்த அனுபவத்தின் அடிப்படையில் மீட்பு பணிக்காக ரெயிலில் வந்தோம். இங்கு மலையில் இருப்பவர்களுக்கு தான் எந்த உதவியும் கிடைக்கவில்லை என்று கேள்விப்பட்டோம். எனவே நாங்கள் மலைப்பகுதிகளுக்கு சென்றோம்.

எந்த இடத்தில் நிலச்சரிவு ஆரம்பித்ததோ அந்த இடத்தில் இருந்துதான் மீட்பு பணியை தொடங்கினோம். இன்னும் எவ்வளவு நாள் இருப்போம் என்பது தெரியாது. ஆனால் முடிந்த அளவுக்கு பாதிக்கப்பட்டவர்களுக்கு ஆதரவு கொடுத்து விட்டுதான் செல்வோம். திருமணத்துக்கு முன்பு எனது மனைவிதான் தன்னார்வலராக இருந்தார். திருமணத்துக்கு பிறகு நானும் அவருடன் சேர்ந்து கொண்டேன்.

இவ்வாறு அவர் கூறினார்.

பிரதாப்பின் மனைவி சங்கவி கூறியதாவது:

எங்களுக்கும் ஒரு குழந்தை இருக்கிறது. அவளுக்கு 3 வயது ஆகிறது. குழந்தைகளின் வீடியோக்களை எங்களுக்கு அனுப்பி வைத்தபோது மீட்பு பணியில் ஈடுபட வேண்டும் என்று முடிவு எடுத்தோம். அதற்காக உடனே கிளம்பி வந்தோம். 2015ம் ஆண்டு சென்னையில் வெள்ளம் ஏற்பட்டது.

அப்போது முதல் நான் மீட்பு பணியில் ஈடுபட்டு வருகிறேன்.

தன்னார்வ தொண்டு பணியில் எனக்கு மிகுந்த ஈடுபாடு இருப்பது எனது கணவருக்கு தெரியும். எனவே அவர் இதுவரை என்னை தடுத்தது கிடையாது. மேலும் அவரும் என்னுடன் மீட்பு பணிக்கு வர சம்மதித்தார். இதில் எனக்கு அவர் மிகவும் உறுதுணையாக இருக்கிறார்.

இவ்வாறு அவர் கூறினார்.

# புதுச்சேரி கவர்னராக கைலாசநாதன் நாளை பதவி ஏற்பு

புதுச்சேரி, ஆக. 6

தெலுங்கானா கவர்ன ராகவும், புதுச்சேரியில் பொறுப்பு கவர்னராக பதவி வகித்து வந்த தமி ழிசை சவுந்தரராஜன் பாராளுமன்ற தேர்தலில் போட்டியிட்டதால், கவர்னர் பதவியை கடந்த மார்ச் மாதம் ராஜினாமா செய்தார்.

அவருக்கு பதிலாக ஜார்க்கண்ட் மாநில கவர்னராக பதவி வகித்து வந்த தமிழகத்தை சேர்ந்த சி.பி. ராதா கிருஷ்ணன் கூடுதல் பொறுப்பாக தெலுங்கானா மற்றும் புதுச்சேரி கவர்னர் பதவி வழங்கப்பட்டது. தற்போது அவர் மகாராஷ்டிரா மாநில கவர்னராக நியமிக்கப்பட்டுள்ளார். இதையடுத்து, கடந்த 27ந் தேதி புதுச்சேரியின் புதிய கவர்னராக கே.கைலாசநாதனை ஜனாதிபதி திரவுபதி முர்மு நியமித்தார். புதுச்சேரி கவர்னராக நியமிக்கப்பட்டுள்ள கைலாசநாதன் 7ந் தேதி (புதன்கிழமை) பதவியேற்கிறார். 6ந் தேதி மாலை புதுச்சேரி வருகிறார். 7ந் தேதி காலை 11.15 மணிக்கு கவர்னர் மாளிகையில் பதவியேற்பு விழா நடக்கிறது. இதில் சென்னை உயர்நீதி மன்ற தலைமை நீதிபதி (பொறுப்பு) கிருஷ்ண குமார் புதிய கவர்னராக நிமியக்கப்பட்டுள்ள கைலாசநாதனுக்கு பதவி பிரமானமும், ரகசிய காப்பு பிரமானமும் செய்து வைக்கிறார். விழாவில் முதல் அமைச்சர் ரங்கசாமி, சபாநாயகர் ஏம்பலம் செல்வம் மற்றும் அமைச்சர்கள், எம்.எல்.ஏ.க்கள், உயர திகாரிகள் கலந்து கொண்டு கவர்னருக்கு வாழ்த்து தெரிவிக்க உள்ளனர். விழாவுக்கான ஏற்பாடுகளை கவர்னர் மாளிகை செய்து வருகிறது. இந்த பதவி ஏற்பு விழாவில் முதலமைச்சர், சபாநாயகர், அமைச்சர்கள், எம்.எல்.ஏ.க்கள் பங்கேற்பதற்காக, 7ந் தேதி காலை 11 மணிக்கு முன்பாக சட்டசபை கூட்டத்தை முடிக்க திட்டமிட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

## சிம்புவின் 'STR 48' படத்தின் அப்டேட் விரைவில்




தமிழ் திரையுலகின் முன்னணி நடிகரான சிம்பு, பத்து தல படத்தின் வெற்றிக்கு பிறகு 'கண்ணும் கண்ணும் கொள்ளையடித்தால்' படத்தின் இயக்குனர் தேசிங்கு பெரியசாமி இயக்கத்தில் 'எஸ்.டி.ஆர். 48' படத்தில் நடிக்கிறார். இப்படத்தை கமல்ஹாசனின் ராஜ்கமல் பிலிம்ஸ் இன்டர்நேஷனல் நிறுவனமும் மகேந்திரனும் இணைந்து தயாரிக்கின்றனர்.

இப்படத்தின் அறிவிப்பு சில மாதங்களுக்கு முன் வெளியாகி ரசிகர்களை உற்சாகப்படுத்தியது. படத்தின் போஸ்டர் சில மாதங்களுக்கு முன் வெளியானது. படத்தில் சிம்பு இரண்டு கதாப்பாத்திரத்தில் நடிக்கவுள்ளார். படம் பீரியாடிக் டிராமாவாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

அதன்பின் சில மாதங்களுக்கு அந்த படத்தைக் குறித்து எந்த தகவல்களும் வெளிவரவில்லை. தற்பொழுது இப்படத்தை குறித்து கலை இயக்குனரான எஸ்.எஸ் மூர்த்தி ஒரு அப்டேட்டை கொடுத்துள்ளார்.

எஸ்டிஆர் 48 படத்தின் செட் போடுவதற்கான மினியேச்சர் வடிவத்திற்கான வேலைப்பாடுகள் முழு தீவிரமாக செய்து வருகிறோம். இதன் 70 சதவீத பணிகள் நிறைவடைந்துள்ளது. மீதம் இருக்கும் பணிகள் விரைவில் முடிக்கப்படும் என கூறியுள்ளார். இப்படம் முழுக்க முழுக்க வரலாற்று ஃபேண்டசி திரைப்படமாக உருவாகவுள்ளது என்றும் இப்படம் இந்திய சினிமாவின் ஒரு மைல் கல்லாக அமையும் என கூறியுள்ளார்.

படத்தின் அடுத்த அதிகாரப்பூர்வ அப்டேட் விரைவில் வெளியிடப்படுல் என கூறியுள்ளார். இதனால் ரசிகர்கள் மிகவும் உற்சாகத்தில் உள்ளனர்.

## தளபதி 69 படத்தில் இணையும் பிரேமலு புகழ் மமிதா பைஜு?



விஜய் தற்பொழுது வெங்கட் பிரபு இயக்கத்தில் கோட் திரைப்படத்தில் நடித்துள்ளார்.

படத்தின் பாடல்கள் வெளியாகியது, படத்தின் டிரைலர் இம்மாதம் வெளியாகும் என எதிர்பார்க்கப்படுகிறது. அதைத்தொடர்ந்து விஜயின் கடைசி திரைப்படமான தளபதி 69 படத்தில் நடிக்கவுள்ளார்.

இப்படத்தை தீரன், துணிவு போன்ற அட்டகாசமான படங்களை இயக்கிய எச். வினோத் இயக்கவுள்ளதாக தகவல் வெளியாகியது. இதனை உறுதி படுத்தும் வகையில் எச். வினோத் ப்ரீ ப்ரொடக்ஷன் பணிகளில் ஈடுப்பட்டு வருவதாகவும் சென்னையில் ஆபிஸ் போடப்பட்டு உள்ளதாகவும் கூறப்படுகிறது.

இது ஒரு அரசியல் அதிரடி திரைப்படமாக அமையவுள்ளது.

மேலும் இப்படத்தில் கதாநாயகியாக சமந்தா நடிக்கவுள்ளார். இசையை அனிருத் மேற் கொள்கிறார். பிரபல தயாரிப்பு நிறுவனமான கேவிஎன் நிறுவனம் தயாரிக்கவுள்ளது. சத்யன் சூர்யன் ஒளிப்பதிவை மேற் கொள்கிறார்.

படப்பிடிப்பு பணிகள் வரும் நவம்பர் மாதம் தொடங்கப்படும் என்ற தகவல் வெளியாகியது. படத்தின் அடுத்த அப்டேட் ஆக பிரேமலு புகழ் மமிதா பைஜூ இப்படத்தில் மிக முக்கியமான கதாப்பாத்திரத்தில் நடிக்கவுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

படத்தின் லுக் டெஸ்ட் பணிகள் தற்பொழுது நடந்துக் கொண்டு இருப்பதாகவும், அது முடிவடைந்த பின் படத்தின் படப்பிடிப்பு பணிகள் மற்றும் அதிகாரப் பூர்வ அறிவிப்புகள் வெளியிடப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## உண்மைக்கு மிக நெருக்கமான படம். அவசியம் பார்க்க வேண்டியப் படம் கொட்டுக்காளி குறித்து சூரி கூறியது




கடந்த 2022 ஆம் ஆண்டு இந்தியா சார்பில் ஆஸ்கார் விருதுக்கு பரிந்துரைக்கப்பட்ட கூழாங்கல் படத்தை இயக்கிய அறிமுக இயக்குநர் பிஎஸ் வினோத்ராஜ் தனது அடுத்த படைப்பாக கொட்டுக்காளி திரைப்படத்தை இயக்கியுள்ளார். சிவகார்த்திகேயன் தயாரிப்பில் சூரி நடிப்பில் உருவாகியுள்ள இப்படத்தின் டீசர் மட்டும் வெளியாகியுள்ளது. திரைப்படம் பல சர்வதேச திரைப்பட விழாக்களில் திரையிடப்பட்டு பல்வேறு மக்களின் ஆதரவை பெற்று பல விருதுகளையும் வென்றது. இந்நிலையில், சூரி, அன்னா பென் உள்ளிட்டோர் நடிப்பில் உருவாகி உள்ள 'கொட்டுக்காளி' திரைப்படம், வருகிற ஆகஸ்ட் 23ம் தேதி திரைக்கு வரவுள்ளது. இதுக்குறித்து சூரி அவரது எக்ஸ் தளத்தில் பதிவு இன்றை பதிவிட்டுள்ளார். அதில் "என்னுடைய முந்தைய படங்களான விடுதலை, கருடனிலிருந்து முற்றிலும் வேறுப்பட்ட திரைப்படமாக #கொட்டுக்காளி இருக்கும். இது ஒரு Main stream Content Oriented திரைப்படம். உண்மைக்கு மிக நெருக்கமான படம். இதில் வரும் என்னுடைய #பாண்டி என்கிற கதாபாத்திரம் எல்லா குடும்பங்ளிலும் இருக்கும் ஒருவன் தான். இந்த சமூகம் சொல்லிக்கொடுத்த உறவு முறைகளையும், நம்பிக்கைகளையும் பெரிதும் நம்புகிற ஒரு கதாபாத்திரம் தான் பாண்டி. இந்த படத்தில் வரும் பயணத்தில், இந்த சமூகம் உருவாக்குனபாண்டிக்கும்,பாண்டிஎன்கிறதனிப்பட்டஒருவனுக்கும்நடக்குறமனபோராட்டத்தசரியாபிரதிபலிக்கனும்னு ரொம்ப கவனமா இருந்தேன். அதை சரியாவும் பண்ணி இருக்கேன்னு நம்புறேன். நீங்க அவசியம் பார்க்கவேண்டிய திரைப்படமாக கொட்டுக்காளி நிச்சயம் இருக்கும்." என்று பதிவிட்டுள்ளார். இதனால் ரசிகர்களிடையே இப்படத்தின் மீது மேலும் எதிர்பார்ப்பு கூடியுள்ளது. கடந்த மாதம் சூரி நடிப்பில் வெளியான கருடன் மாபெரும் வெற்றியைப் பெற்றது. அடுத்ததாக சூரி நடிப்பில் விடுதலை 2 மற்றும் ஏழு கடல் ஏழு மழை போன்ற படங்கள் வெளியாகவுள்ளது.

## சத்யராஜ் நடித்த My Perfect Husband ஓடிடி சீரிஸ் விரைவில்




தமிழ் சினிமாவின் வெர்சடைல் நடிகர்களில் ஒருவர் சத்யராஜ். எந்த கதாப்பாத்திரம் கொடுத்தாலும் அதுக்கேற்றார் போல திறமையான நடிப்பை வெளிப்படுத்தும் நபர். இவர் நடிப்பில் கடந்த மாதம் வெளியானது வெப்பன் திரைப்படம்.

வெப்பன் திரைப்படத்தின் ஒரு சூப்பர் ஹுயுமன் கதாப்பாத்திரத்தில் நடித்து இருந்தார். திரைப்படம் மக்களிடையே கலவையான விமர்சனத்தை பெற்றது. அண்மையில் விஜய் ஆண்டனி நடிப்பில் வெளியான மழை பிடிக்காத மனிதன் திரைப்படத்திலும் ஒரு மாறுப்பட்ட கெட்டப்பில் நடித்து இருந்தார்.

அடுத்ததாக சத்யராஜ் ஓடிடி சீரிஸ் ஆன மை பெர்ஃபக்ட் ஹஸ்பண்ட் என்ற தொடரில் நடித்துள்ளார். படத்தின் ஃபர்ஸ்ட் லுக் தற்பொழுது வெளியாகியுள்ளது. சத்யராஜுடன் சீதா, ரேகா மற்றும் ரேஷ்மா முன்னணி கதாப்பாத்திரத்தில் நடித்துள்ளனர்.

இத்தொடரில் வர்ஷா பொல்லமா முக்கிய கதாப்பாத்திரத்தில் நடித்துள்ளார். இத்தொடரை தமிரா இயக்கியுள்ளார். விரைவில் இத்தொடரானது டிஸ்னி பிளஸ் ஹாட்ஸ்டாரில் வெளியாகவுள்ளது. முகமத் ரசித் தயாரித்த இத்தொடரை வித்யாசாகர் இசையமைத்துள்ளார்.

## பிலிம் ஃபேர் விருதுகளை குவித்த சித்தார்த்தின் 'சித்தா'




நடிகர் சித்தார்த் நடிப்பில் கடந்த ஆண்டு செப்டம்பர் மாதம் வெளியான திரைப்படம் சித்தா. பண்ணையாரும் பத்மினியும், சேதுபதி உள்ளிட்ட வெற்றி படங்களை இயக்கிய அருண்குமார் இந்த படத்தை இயக்கி இருந்தார்.

இடாகி எண்டர்டெயின்மெண்ட் நிறுவனம் தயாரித்த இந்த படத்திற்கு திபு தாமஸ் இசையமைத்து இருந்தார். சித்தார்த்துடன் இணைந்து நிமிஷா சஜயன் முக்கிய கதாப்பாத்திரத்தில் நடித்து இருந்தார்.

திரைப்படம் வெளியாகி மக்களிடையே மிகப்பெரிய வரவேற்பை பெற்றது. படம் விமர்சனம் ரீதியாகவும் , வசூல் ரீதியாகவும் உச்சத்தை தொட்டது. படத்தில் இடம் பெற்ற கண்கள் ஏதோ மற்றும் சந்தோஷ் நாரயணன் பாடிய உனக்கு தான் போன்ற பாடல் மிகப் பெரிய அளவில் மக்களால் ரசிக்கப்பட்டது. 69 ஆம் ஆண்டு தென் சோபா பிலிம் ஃபேர் விருது வழங்கும் விழா ஐதராபாத்தில் நடைப்பெற்றது. அதில் தென்னிந்திய நட்சத்திர நடிகர்கள் பங்கேற்றனர். சித்தா திரைப்படம் மொத்தம் 7 பில்ம் ஃபேர் விருதுகளை வென்றுள்ளது. சிறந்த திரைப்படம், சிறந்த நடிகர் சித்தார்த் , சிறந்த நடிகை நிமிஷா சஜயன், சிறந்த குணச்சித்திர நடிகை அஞ்சலி நாயர், சிறந்த பின்னணி பாடகி கார்த்திகா வைத்தியநாதன் , சிறந்த இசை திபு நினன் தாமஸ் மற்றும் சந்தோஷ் நாரயணன், சிறந்த இயக்குனர் எஸ்.யூ அருண் குமார் இதனால் படக்குழுழுவினர் மிகவும் மகிழ்ச்சியுடன் இருக்கின்றனர். பிலிம் ஃபேர் விருதுடன் சித்தார்த் இருக்கும் அவரது சமூக வலைத்தளத்தில் புகைப்படத்தை பதிவிட்டுள்ளார். இதனால் படக்குழுவினருக்கு பலரும் பாராட்டி தெரிவித்து வருகின்றனர்.

## ஒலிம்பிக்ஸில் நீரஜ் சோப்ரா தங்கம் வென்றால் இந்தியர்களுக்கு இலவச விசா.. அட்லிஸ் CEO கொடுத்த ஆஃபர்




பாரீஸ் ஒலிம்பிக்ஸ் போட்டிகள் பரபரப்புக்கு பஞ்சம் இல்லாமல் நடந்து வருகிறது. இதுவரையில் நடைபெற்ற போட்டிகளில் 3 வெண்கலப் பதக்கங்களை வென்று இந்தியா பதக்கப்பட்டியலில் 53ஆவது இடத்தில் உள்ளது. இந்நிலையில் ஈட்டியெறிதல் பிரிவுக்கான போட்டிகள் நாளை [ஆகஸ்ட் 6] தொடங்குகிறது. இதில் இந்தியா சார்பில் நீரஜ் சோப்ராவும் கிஷோர் ஜெனாவும் விளையாடுகின்றனர்.

இதில் நீரஜ் சோப்ரா தங்கம் வென்றால் இந்தியர்கள் அனைவர்க்கும் இலவச வீசா வழங்கப்படும் என்று ஆன்லைனில் விசா விண்ணப்பிக்கும் சேவையை வழங்கும் நிறுவனமான Atlys நிறுவனத்தின் CEO மோஹக் நாஹ்டா அறிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் தனது LinkedIn பக்கத்தில் வெளியிட்டுள்ள பதிவில், வரும் ஆகஸ்ட் 8 ஆம் தேதி நடைபெற உள்ள போட்டியில் நீரஜ் தங்கம் வென்றால் Atlys இந்தியப் பயனர்களுக்கு உலகின் எந்த நாட்டுக்கும் செல்ல இலவச வீசா வழங்கப்படும். இதன்மூலம் பயன்பெற விரும்புவார்கள் உங்களின் இமெயில் முகவரியை கமெண்ட் செக்ஷனில் பதிவிடுங்கள்.

நானே தனிப்பட்ட முறையில் அனைவருக்கும் விசாக்களை அனுப்பி வைக்கிறேன் என்று குறிப்பிட்டுள்ளார். கடந்த 2020 ஆம் ஆண்டு டோக்கியோவில் நடந்த ஒலிம்பிக்ஸ் ஈட்டியெறிதல் போட்டியில் நீரஜ் சோப்ரா தங்கம் வென்றது குறிப்பிடத்தக்கது.

## 2வது ஒருநாள் போட்டி: வாண்டர்சே அபார பந்துவீச்சு இந்தியாவை வீழ்த்தியது இலங்கை




இந்திய அணி இலங்கைக்கு சுற்றுப்பயணம் சென்று 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் விளையாடி வருகிறது. நேற்று முன்தினம் நடந்த முதல் ஒருநாள் போட்டி டையில் முடிந்தது.

இந்நிலையில், இலங்கைஇந்திய் அணிகளுக்கு இடையிலான 2வது ஒருநாள் போட்டி கொழும்புவில் இன்று நடைபெறுகிறது. டாஸ் வென்ற இலங்கை அணி பேட்டிங் தேர்வு செய்தது.

அதன்படி, முதலில் ஆடிய இலங்கை அணி நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவரில் 9 விக்கெட் இழப்புக்கு 240 ரன்களை எடுத்தது. அவிஷ்கா பெர்னாண்டோ 40 ரன்னிலும், குசால் மெண்டிஸ் 30 ரன்னிலும் அவுட்டாகினர். வெலாலகே 39 ரன்னிலும், கமிந்து மெண்டிஸ் 40 ரன்னில் ஆட்டமிழந்தனர்.

இந்தியா சார்பில் வாஷிங்டன் சுந்தர் 3 விக்கெட்டும், குல்தீப் யாதவ் 2 விக்கெட்டும் வீழ்த்தினர்.

இதையடுத்து, 241 ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் இந்திய அணி களமிறங்கியது. தொடக்க ஜோடி ரோகித் சர்மா, சுப்மன் கில் அதிரடியாக ஆடியது.

முதல் விக்கெட்டுக்கு 97 ரன்கள் சேர்த்த நிலையில் ரோகித் சர்மா அரை சதமடித்து 64 ரன்னில் அவுட்டானார், சுப்மன் கில் 35 ரன்னில் வெளியேறினார். அக்சர் படேல் ஓரளவு தாக்குப் பிடித்து 44 ரன்கள் எடுத்தார்.

இறுதியில் இந்திய அணி 208 ரன்களுக்கு ஆல் அவுட்டானது.

இலங்கையின் வாண்டர்சே 6 விக்கெட் வீழ்த்தி அசத்தினார். இதன்மூலம் இலங்கை அணி 10 என முன்னிலை பெற்றுள்ளது.

## டிஎன்பிஎல் கிரிக்கெட்: முதல்முறையாக சாம்பியன் பட்டம் வென்று அசத்திய திண்டுக்கல் டிராகன்ஸ்




டிஎன்பிஎல் கிரிக்கெட் தொடரின் இறுதிப் போட்டி நேற்றிரவு நடைபெற்றது. இந்த போட்டியில் ஷாருக்கான் தலைமையிலான லைகா கோவை கிங்ஸ் மற்றும் ரவிசந்திரன் அஸ்வின் தலைமையிலான திண்டுக்கல் டிராகன்ஸ் அணியும் மோதின.

இந்த போட்டியில் டாஸ் வென்ற திண்டுக்கல் அணி முதலில் பந்துவீச்சு தேர்வு செய்தது. முதிலில் களமிறங்கிய கோவை அணி பேட்டர்கள் துவக்கம் முதலே விக்கெட்டுகளை பறிக்கொடுத்தனர். இதனால் அந்த அணி 20 ஓவர்கள் முடிவில் 7 விக்கெட்டுகளை இழந்து 129 ரன்களை மட்டுமே எடுத்தது.

கோவை அணி சார்பில் ராம் அரவிந்த் 27, அத்தீக் உர் ரஹ்மான் 25 மற்றும் சுஜய் 22 ரன்களை எடுத்தனர். திண்டுக்கல் அணி சார்பில் விக்னேஷ் புத்தூர், சந்தீப் வாரியர் மற்றும் வருண் சக்கரவர்த்தி தலா 2 விக்கெட்டுகளை வீழ்த்தினர்.

எளிய இலக்கை துரத்திய திண்டுக்கல் அணிக்கு வழக்கம்போல ரவிசந்திரன் அஸ்வின் அதிரடியாக ஆடி ரன்களை சேர்த்தார். இவருடன் ஆடிய மற்ற வீரர்களும் ரன் குவிப்பில் ஈடுபட திண்டுக்கல் அணி 18.2 ஓவர்களில் 4 விக்கெட்டுகளை மட்டும் இழந்து 131 ரன்களை எடுத்து 6 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

திண்டுக்கல் அணி சார்பில் ரவிசந்திரன் அஸ்வின் 52, பாபா இந்திரஜித் 32 மற்றும் சரத் குமார் 27 ரன்களை எடுத்தனர். கோவை அணி சார்பில் சித்தார்த், வல்லியப்பன் யுதீஸ்வரன் மற்றும் கௌதம் தாமரை கண்ணன் தலா ஒரு விக்கெட் வீழ்த்தினர்.

இந்த வெற்றியின் மூலம் திண்டுக்கல் டிராகன்ஸ் அணி டிஎன்பிஎல் தொடரில் முதல் முறையாக கோப்பையை வென்று அசத்தியது.

## இதுவே எனது கடினமான போட்டி: லக்ஷயாவை பாராட்டிய அக்சல்சென்

பிரான்ஸ் தலைநகர் பாரீசில் ஒலிம்பிக் போட்டிகள் நடைபெற்று வருகிறது. இதில் 200க்கும் மேற்பட்ட நாடுகளைச் சேர்ந்த பல வீரர், வீராங்கனைகள் பங்கேற்றுள்ளனர்.

இந்தியா சார்பில் துப்பாக்கிச் சுடுதலில் தனிநபர் பிரிவில் மனு பாக்கர், ஸ்வப்னில் குசாலே ஆகியோர் வெண்கலம் வென்றனர். கலப்பு இரட்டையர் பிரிவில் மனு பாக்கர், சரப்ஜோத் சிங் ஜோடி வெண்கலம் வென்றது.

இன்று நடந்த பேட்மிண்டன் அரையிறுதி போட்டியில் இந்திய வீரர் லக்ஷயா சென், டென்மார்க் வீரர் விக்டர் அக்சல்சென்னுடன் மோதினார்.

இதில் லக்ஷயா சென் 2022, 1421 என்ற செட் கணக்கில் தோல்வி அடைந்தார். இதன்மூலம் டென்மார்க் வீரர் இறுதிப்போட்டிக்கு முன்னேறினார்.



இந்நிலையில், வெற்றிக்கு பிறகு டென்மார்க் வீரர் விக்டர் அக்சல்சென் கூறுகையில், லக்ஷயா சென் மிகவும் அபார திறமை வாய்ந்தவர்.இன்றையபோட்டி எனக்கு மிகவும் கடினமாக இருந்தது. அவருக்கு மிக சிறந்த எதிர்காலம் உள்ளது. அடுத்த 4 ஆண்டுகளில் ஒலிம்பிக் போட்டியில் லக்ஷயா சென் நிச்சயம் தங்கம் வெல்வார். அவர் வெற்றி பெற வாழ்த்துக்கள் என தெரிவித்தார்.



**இரத்தலின் இன்னாது மன்ற நிரப்பிய**
**தாமே தமிய ருணல்**

**விளக்கம்:**

பொருளின் குறைபாட்டை நிரப்புவதற்க்காக உள்ளதைப் பிறர்க்கு ஈயாமல் தாமே தமியராய் உண்பது வறுமையால் இறப்பதை விடத் துன்பமானது.

நமது தினகனி
செய்திகள் மற்றும்
விளம்பரங்கள் தொடர்புக்கு:
94436 99066
namadhudhinakani@gmail.com
www.dhinakani.com
Canara Bank Account : 120028528266
IFSC code : CNRB0001041

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 63815.1. Editor: KANI RAJA V.